OPEN ACCESS

Volume: 4

Issue: 4

Month: April

Year: 2020

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 3.2.2020

Accepted: 11.3.2020

Published: 01.04.2020

Citation:
Ashok, D. (2020). Beliefs in Nature. *Shanlax International Journal of Tamil Research*, *4*(4), 100–108.

DOI:
https://doi.org/10.34293/tamil.v4i4.2400

*Corresponding Author:
kailaiashok@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Beliefs in Nature

**Dr. D. Ashok***
*Assistant Professor in Tamil Department*
*Government Arts and Science College, Kumulur*
*Lalgudi, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-3713-0824

**Abstract –** Tamil people living in the countryside. They are living their lives by putting their thoughts on natural products. Folklore rewards the good and evil of the stars in the sky. The Sun or Moon appears after the disappearance of the people and is considered a new beginning. People believe that appealing to the deity can convey rain through rituals. The folk believe that appeals to the deity can be communicated by laws such as showers of rain. People believe that the gods and the evil spirits stay in the plants so that some plants are worshiped and some are taken away from their lives. People believe that animals are related to their body organs and that they are beneficial. Thus the confidence in the thoughts of the people is developed. Such beliefs are the cause of people who think that the benefits are good. They have established themselves in the community. That emerges as a community-based culture.

**Key Words:** Folklore, Tamil classic literature, Folk beliefs in nature, Weather changes, Shower rituals, Wooden worship.

## References

1. Gandhi, K. (1980). *Thamilzhar Pazhakkangalum Nampikkaigalum*. Ulaga Tamil Aaraichi Niruvannam, Chennai.
2. Gandhi, K. (1983). *Thamilzhar Ennangal*. Ulaga Tamil Aaraichi Niruvannam, Tharamani, Chennai.
3. Krishnan, A. (1992). *Thamizhar Panpattiyal*. Chennai, Manivasagar Pathippagam.
4. Manogaran, R. (2001). *Nattuppura Vealaanmai*. Bengaluru, Thannannanea Pathippagam.
5. Loorthu , D. (1981). *Naattaar Valakkaattriyal Aaivugal Volume – 1*. Thirunelveali, Paariveal Pathippagam.
6. Sakthivel, S. (1995). *Nattuppurayiyal Aaivu*. Chennai, Manivasagar Pathippagam.
7. Sundaramoorthy, E. (1991). *Elakkiyamum Panppadum*. Institute of South Indian Studies, Chennai.
8. Sengo Varatharajan. (1988). *Merkku Thamizhaga Nattuppuraviyal oor Aaivu*. New Century Book House Private Limited, Chennai, July.
9. Thatchinamoorthy, A. (1999). *Thamizhar Nagarigamum Panpadum*. Yazhl Vealieedu, Chennai.
10. Thirunavukkarasu, K.T. (2001). *Thamizhl Panpadu*, Ulaga Tamil Aaraichi Niruvannam, Chennai.

# இயற்கையின் மீதான நம்பிக்கைகள்

*முனைவர் தே. அசோக்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குமுலூர், இலால்குடி

***ஆய்வுச்சுருக்கம்*** *– நாட்டுப்புறங்களில்வாழும்தமிழ்மக்கள் இயற்கையாய்விளங்கும்பொருட்கள்மீதுதங்கள் எண்ணங்களைச் செலுத்தி வாழ்வினை மேற்கொண்டு வருகின்றனர். விண்ணில் தோன்றும் நட்சத்திரங்களின் செயல்பாடுகளுக்கு ஏற்ப நாட்டுப்புற மக்கள் நன்மை தீமைகளைப் பலன்களாகக் கணித்துக் கொள்கின்றனர். கிரகண நேரங்களில் சூரியனோ சந்திரனோ மறைந்தப் பிறகு தோன்றுவதைப் புதிய தொடக்கமாக மக்கள் கருதி இருக்கலாம். தெய்வத்திடம் முறையிடுதல், மழைச்சோறு எடுத்தல், போன்ற சடங்குகளின் வாயிலாக மழையைப் பெய்விக்க இயலும் என்று மக்கள் நம்புகின்றனர். தாவரங்களில் தெய்வங்களும் தீய ஆவிகளும் தங்கும் என்பது மக்களின் எண்ணங்களில் அமைகின்றன. அதனால் சில தாவரங்களை வழிபாடு நிகழ்த்தி வாழ்ந்து வருகின்றனர். விலங்குகளின் உறுப்புகளும் உடல் அமைப்பிற்கும் ஏற்ப தொடர்புடையவர்களுக்கு நன்மை தீமை நிகழும் என்று மக்கள் நம்புகின்றனர். நன்மைகள் நிகழ வேண்டும் என்று எண்ணும் மக்களின் எண்ணங்களே இதுபோன்ற நம்பிக்கைகள் பிறக்க காரணங்களாக அமைகின்றன. மக்களின் எண்ணங்களில் நம்பிக்கை உருவாகி சமூகத்தில் நிலைபெற்று பண்பாடு வெளிப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *நாட்டுப்புறவியல், தமிழ்ச் சொல்லியல் இலக்கியம், நாட்டுப்புற நம்பிக்கைகள், இயற்கை நம்பிக்கைகள், வானிலை மாற்றங்கள், மழைச் சடங்குகள், மர வழிபாடுகள், விலங்குகளின் தோற்றம், வளமை மாற்றம்.*

உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்ந்து வருகின்றன. அவற்றில் மனித இனம் தன் சிந்தனைத்திறத்தால் மென்மேலுமான வளர்ச்சியினை நிகழ்த்தி வருகிறது. மனித இனம் இடம், மொழி, நிறம், போன்றவற்றால் வேறுபடுகின்றது. நாட்டுப்புறங்களில் வாழும் தமிழ்மக்கள் இயற்கையாய் விளங்கும் பொருட்கள் மீது தங்கள் எண்ணங்களைச் செலுத்தி வாழ்ந்து வருகின்றனர். அவற்றின் வாயிலாக மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைகளும் அவற்றினால் வெளிப்படுகின்ற பண்பாட்டையும் அறியலாம். நாட்டுப்புற மக்களின் வாழ்வில் இயற்கைப் பொருட்கள், தாவரங்கள், விலங்கினங்கள் ஆகியன வாழ்வோடு தொடர்புடையன. உயிரினங்களைப் பாகுபடுத்தி வாழும் நிலை, பழங்காலம் முதல் இருந்து வரும் நடைமுறையாகும்.

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே (தொல். 1526)**

என்ற நூற்பா முறையே புல், நத்தை, எறும்பு, வண்டு, மாடு, மனிதன், ஆகிய உயிர்களை ஓரறிவு, ஈரறிவு என்ற நிலையில் வகைப்படுத்திக் கூறுகின்றன. இவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள உயிரினங்களை ஒட்டியே நாட்டுப்புற மக்களின் வாழ்வு அமைகின்றது. உயிரினப் பாகுபாட்டிலும் நாட்டுப்புற நம்பிக்கைகள் தொடர்கின்றன. நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் சிறு உயிரிலிருந்து அண்டவெளி வரையுமாக விரிந்து பரவியுள்ளது.

**வானிலை தொடர்பான நம்பிக்கைகள்**

இயற்கைத் தொடர்பான நம்பிக்கைகளில் வான்வெளியில் நிகழும் செயற்பாடுகள் குறிப்பிடத்தக்கதாக அமைகின்றன. விண்ணில் தோன்றும் நட்சத்திரங்களின் செயல்பாடு களுக்கு ஏற்ப நாட்டுப்புற மக்கள் நன்மை, தீமைகளைப் பலன்களாகக் கணித்துக் கொள்கின்றனர். இவ்வடிப்படையிலே சமூகத்தில் சோதிடம் பிறந்தது. எரி நட்சத்திரம் வீழ்தல் தீமைக்கு அறிகுறி என்பது மக்களின் நம்பிக்கையாக அமைகிறது. இந்நம்பிக்கை மரபு வழிப்பட்டதாகும்.

**கனையெரி பரப்பக் காலெதிர்பு பொங்கி**
**ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே**
**அது கண்டி யாமும் பிறரும்**
**பல்வே றிரவலர் (புறம். 229: 11-13)**

என்ற பாடலில் நட்சத்திரம் எரிந்து விழுவது நாடாளும் வேந்தனுக்குத் தீங்கு என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது. மண்ணில் தலைவர்களாக விளங்குபவர்களுக்கு விண்ணில் தோன்றும் நட்சத்திரம் ஒப்பாகக் கருதப்படுகிறது. விண்மீனின் வாழ்நாள் முடியும் வேளையில் மண்ணில் வாழும் தலைவரின் வாழ்நாளும் முடிந்து விடும் என்பது மக்களின் கருத்தாக விளங்குகிறது. “எரி நட்சத்திரம் வீழ்தல்” இன்று நாட்டுப்புற மக்களிடம் சற்று மாறுதல் பெற்றுள்ளது. எரி நட்சத்திரத்தைக் காணுதல் நினைவு மறதிக்கு வழிவகுக்கும் என்பது மக்களின் தற்கால நம்பிக்கையாக அமைகிறது.

**கோள்களின் இயக்க நிலையில் நம்பிக்கைகள்**

பூமியும் பிறகோள்களும் சூரியனை மையமிட்டு நீள் வட்டப்பாதையில் சுழன்று வருகின்றன. பூமி, சந்திரன், சூரியன் ஆகியவை ஒரே நேர்க்கோட்டில் அமையும் நிலையில், புவியின் பார்வையில் சூரியனும், சந்திரனும் குறிப்பிட்ட நேரத்திற்கு மறைக்கப்படுகின்றன. அவை முறையே சூரிய கிரகணம் என்றும், சந்திரக் கிரகணம் என்றும் மக்களால் அழைக்கப்படுகின்றன. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குச் சூரிய ஒளியோ, சந்திர ஒளியோ புவியில் காணப் படுவதில்லை இவ்வாறான நிலைகளிலும் மக்களிடம் நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இந்நிகழ்வினைப் பழங்காலத்தில் பாம்பு, கோள்களை விழுங்குவதாக மக்கள் நம்பினர்.

**கிருகருங் கயலோ டிடைக்குமி ழெழுதி**
**அங்கண் வானத் தாவுப்பகை யஞ்சித்**
**திங்களு மீண்டுத் திரிதலு முண்டுகொல்**
**(சிலம்பு. 5: 205-207)**

என்ற பாடல் சந்திரனைப் பாம்பு விழுங்கும் என்ற செய்தியினை வெளிப்படுத்துகிறது. நாட்டுப்புற மக்களிடம் இந்த நிகழ்வுகள் தற்காலத்தில் வேறுவித நம்பிக்கைகளை வெளிப்படுத்துகின்றன. சான்றாகக் காய் காய்க்காத மரத்தில் கிரகண நேரங்களில் மரத்தின் வேர்ப்பகுதியில் உலக்கையால் குத்தினால் அதன் பிறகு மரம் காய்க்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.[1] கிரகண நேரங்களில் சூரியனோ, சந்திரனோ மறைந்து பிறகு தோன்றுவதனைப் புதிய தொடக்கமாக மக்கள் கருதியிருக்கலாம். தாவரங்கள் செழித்துப் பலன் தர வேண்டும் என்ற எண்ணங்கள் மக்களை இவ்வாறான நம்பிக்கைச் சடங்கிற்கு உட்படுத்துகிறது.

**மழை தொடர்பான நம்பிக்கைகள்**

உழவுத் தொழில் சிறப்பாக நடந்தால் தான் உலகின் இயக்கங்களான வாணிபம், அரசியல், பொருளாதாரம், கலை போன்றவை சிறப்பாக அமையும். உழவுத் தொழிலுக்கு அடிப்படைத் தேவையாக நீர்வளம் அமைகிறது.

**நீர் இன்று அமையாது உலகெனின் யார் யார்க்கும்**
**வான் இன்று அமையாது ஒழுக்கு (குறள். 20)**

என்ற குறள் நீரின் இன்றியமையாத தன்மையை விளக்குகிறது. நீர் வளத்திற்கு ஆதாரமாய் மழைப் பொழிவு விளங்குகிறது.

மழைப் பொழிவு அனைத்து உயிர்களின் உற்பத்திக்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாய் விளங்குகிறது. அத்தகைய மழைப்பொழிவு குறித்தும் நாட்டுப்புற மக்கள் பல்வேறு எண்ணங்களைக் கொண்டு செயல்படுகின்றனர். அவற்றில் மழை பொழிவதற்குரிய அறிகுறிகள், மழைக்காக மேற்கொள்ளப்படும் சடங்குகள் போன்றவை நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன.

### மழைக்குரிய அறிகுறிகள்

பூமியில் பல்வேறு வளங்களை மழைப் பொழிவு வழங்குகிறது. இச்செயற்பாடு நிகழ்வதற்கு முன்பாக இயற்கை நிகழ்வுகள், பூச்சிகள், விலங்குகள், பறவைகள், தட்ப வெப்பநிலைகள் போன்றவற்றின் மூலமாக அதற்குரிய அறிகுறிகளை அறியலாம் என்று மக்கள் நம்புகின்றனர். சான்றாக, வடகிழக்கு மூலையில் கருமேகம் காணப் பட்டால் உறுதியாக மழை பெய்யும் என்று நாட்டுப்புற மக்கள் நம்புகின்றனர். வான் வெளியின் நிகழ்வுகளை மையமிட்டு மழைக்குரிய அறிகுறிகளைக் காணும் நிலை மக்களிடையே காலங்காலமாக இருந்து வருகிறது.

> **கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்**
> **விரிகதிர் வெள்ளி தென்புலம் படரினும்**
> **கால்பொரு நிவப்பிற் கடுங்குர லேற்றோடும்**
> **சூன்முதிர் கொண்மூப் பெயல்வளஞ் சுரப்பக் (சிலம்பு. 10:102-105)**

என்ற பாடல் கோள்களின் நிலைக்கேற்ப மழைப் பொழிவு அமையும் என்ற மக்கள் நம்பிக்கையினை வெளிப்படுத்துகிறது. நம்பிக்கைகளை மக்கள் தங்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து பெற்றிருக்கக்கூடும். எறும்புகள் தங்களின் முட்டை மற்றும் அதன் உணவுப் பொருட்களை வேறு இடத்திற்கு எடுத்துச் சென்றாலும் மழை வரும் என்ற மக்களின் நம்பிக்கை, மரபு வழிப்பட்டதாகும்.

> **பொய்யா வெழிலி பெய்விட நோக்கி**
> **முட்டை கொண்டு வற்புலஞ் சேரும்**
> **(புறம். 173:5-6)**

என்ற பாடல் மேற்கண்ட நம்பிக்கையினை உறுதிப்படுத்தும்.

### தெய்வத்திடம் முறையிடுதல்

வானம், மழை பெய்யத் தவறினால் பூமி வறண்டு வளங்கள் குறைந்து, உலக உயிர்கள் பசித்துன்பத்திற்கு உட்படவேண்டிய நிலை உருவாகும்.

> **'விண் இன்று பொய்ப்பின் விரி நீர் வியனுலகத்து**
> **உள் நின்று உடற்றும் பசி" (குறள். 13)**

என்ற குறள் இக்கருத்தினைக் குறிப்பிடுகிறது. மக்கள் மழையினைப் பெற வேண்டி தெய்வத்திடம்வழிபாடுமேற்கொள்கின்றனர்.

> **மலைவான் கொள்கென வுயர்பலி தூஉய்**
> **மாரி யான்று மழைமேக் குயர்கெனக்**
> **கடவுட் பேணிய குறவர் மாக்கள்**
> **(புறம். 143: 1-3)**

என்ற பாடல், மழை பெற வேண்டி மக்கள் மேற்கொண்ட தெய்வ வழிபாட்டைக் குறிப்பிடுகிறது.

> **ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறையெடுப்ப**
> **மழை வீற்றிருந்து வளம்பல பெருகிப்**
> **பிழைய (சிலம்பு.உரை.கட்டுரை.3:5-6)**

என்ற பாடலும் தெய்வ வழிபாட்டால் மழைவளம் அமையும் என்றுரைக்கிறது. நாட்டுப்புறமக்கள்மழைக்குரியதெய்வமாக "மாரியம்மனை" வழிபடுகின்றனர். மாரியம்மனைத்தவிர ஐயனார், அங்காயி அம்மன் போன்ற தெய்வங்களை வணங்கி வழிபடுவதன் வாயிலாகவும் மழையைப் பெறலாம்எனநாட்டுப்புறமக்கள்நம்புகின்றனர். அங்காயி அம்மனுக்கு வேண்டுதல் புரிந்து ஆட்டுக் கிடாயை பலியிட்டால் அடுத்த சில தினங்களிலேயே மழை பெய்யும் என்று மக்கள் நம்புகின்றனர்.[2]

**மழைச்சோறு எடுத்தல்**

தங்களின் துன்பங்களைச் சடங்குகள் மூலமாக வெளிப்படுத்தினால் இயற்கை அத்துன்பங்களை நீக்கும் என்று மக்கள் நம்புகின்றனர். மழை பொய்த்ததால் ஏற்பட்ட துன்பத்தைப் போக்க குழந்தைப் பேறுடைய பெண்கள், கன்னிப் பெண்கள் மற்றும் சிறுவர், சிறுமியர் ஆகியோர் ஊரில் ஒன்று கூடுகின்றனர். பிறகு அனைத்து வீடு களுக்கும் சென்று சோறு வாங்கி வருகின்றனர். அப்பொழுது இசைக்கருவிகள் இசைக்கப் படுகின்றன. பிறகு அந்தச் சோற்றை உப்பில்லாமல் ஒன்றாகக் கலந்து உண்கின்றனர். அதன் பிறகு மழை பொய்த்ததால் ஏற்பட்ட இன்னல்களை மாரடித்து ஒப்பாரிப் பாடி அழுது புலம்புகின்றனர்.

**குட்டியப்பக் கோனாரே**
**குண்டுமணி தாயாரே**
**வடக்கே நெல்லு வாங்கி**
**வயல்ல தெளிச்சு வச்சோம்**
**வய பாக்க போன தம்பி**
**வயித்தெரிஞ்சு வந்தாங்க**
**வானத்து ராசவே**
**மேகத்து மந்திரியே**
**இறங்கும் போதே எழுந்திரிக்கும் சூரியனே**
**பொன்னு பயிரெடுத்து**
**புழுதியிலே தெளிச்சு வச்சோம்**
**பொன்னு மழை பொய்யலே**
**இந்த புமி விளையலே**
**தங்க பயிரெடுத்து**
**தரையிலே தெளிச்சு வச்சோம்**
**தானியம் விளையலே**
**ஒரு மானம் இடிக்கலையே**
**ஒரு வய்ய மழை பெய்யலையே**[3]

என்ற பாடலைப் பாடி இறுதியாக பெண்களில் சிலர் "இனி வாழ்வதற்கு வழியில்லை" எனக்கூறி ஊரை விட்டு நாடோடியாகச் செல்வது போன்று பாவனை செய்கின்றனர். இவர்களை வயதான பெண்கள் சமாதனப்படுத்தி வீட்டிற்கு அழைத்து வருகின்றனர். இவ்வாறு "மழைச்" சோறு எடுத்தல்" சடங்கு நிறைவு பெறுகிறது. இந்த நிகழ்விற்கு அடுத்த சில தினங்களில் வானம் மழைப் பொழியும் என்பது மக்கள் நம்புகின்றனர். மக்கள் தங்களின் தேவையைப் பெறுவதை மையமிட்டே நம்பிக்கைகள் அமைகின்றன.

**தாவரங்கள் தொடர்பான நம்பிக்கைகள்**

மரங்கள் மனித வாழ்க்கைக்கு மட்டுமின்றி பிற உயிரினங்களின் வாழ்க்கைக்கும் உறுதுணையாக விளங்குகின்றன. பூமியின் சிறப்புக் கூறுகளில் ஒன்றாக விளங்குபவை தாவரங்களாகும். உயிர்ப் பாகுபாட்டில் தாவரங்களை ஓரறிவு படைத்தவை என்றும், அவற்றின் வகைகளாக புல், மரம், செடி, கொடி போன்றவற்றையும் தொல்காப்பியர் வகைப்படுத்துவார்.

**ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே (தொல். 1526) எனவும்,**
**புல்லும் மரனும் ஓர் அறிவினவே**
**பிறவும் உளவே அக்கிளைப்பிறப்பே**
**(தொல். 1527)**

எனவும் நூற்பாக்கள் தாவர இனங்கள் குறித்து எடுத்துரைக்கின்றன. புறத்தில் வயிரம் உடையவை புல் என்றும், அகத்தில் வயிரம் உடையவை மரம் என்றும் குறிப்பிடுவர்.

**புறக் காழனவே புல் என மொழிப**
**அகக் காழனவே மரம் என மொழிப**
**(தொல். 1585)**

என்ற நூற்பா இதனைப் புலப்படுத்தும். இத்தாவரயினங்களும் மக்களின் நம்பிக்கைகளில் அமைகின்றன.

**மரவழிபாடு**

இயற்கையை வணங்கியதே வழிபாட்டின் தொடக்கமாகும். இயற்கை வழிபாட்டில்

மரவழிபாடு குறிப்பிடத்தக்கதாகும். மனிதனின் ஒவ்வொரு செயலிலும், சிந்தனையிலும் தெய்வ நம்பிக்கைகள் காணப்படுகின்றன. இறையாற்றல் உலகின் அனைத்து இடங்களிலும் நீக்கமற நிறைந்திருப்பதாக மனித இனம் நம்பியது. அவற்றில் நீர்நிலை, மரம், மலை, போன்ற இடங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

> **செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்**
> **கல் லெறிந்து தெழுதிய நல்லரை மராஅத்த**
> **கடவு ளோங்கிய காடேசு கவலை**
> ***(மலை. 394–396)***

என்ற பாடல் மரத்தில் தெய்வம் உறையும் என்ற பழந்தமிழரின் நம்பிக்கையைப் புலப்படுத்துகிறது. இவ்வாறான நம்பிக்கைகளை அடியொற்றிய மக்கள் மரவழிபாடுகளை மேற்கொள்ளத் தொடங்கினர். “மனித இனத்தின் தொடக்க காலத்தில் உண்பதற்கு கனியும், நிழலும், நோய் நீக்கமும் புரிந்த மரங்களை நன்றியுணர்வோடு வணங்கி இருக்க வேண்டும். அதுவே மர வழிபாடு தோன்றுவதற்குக் காரணமாக இருக்க வேண்டும் என்பர்.”[4] வேப்ப மரத்தில் அம்மன் உறைவதாக மக்கள் நம்புகின்றனர். இவ்வாறு மர வழிபாட்டினை மேற் கொண்டால் குழந்தைப் பேறு இல்லாதவர்கள் குழந்தை பெறவும், பிற துன்பங்கள் நீங்கி நன்மைகள் பெறவும் இயலும் என மக்கள் நம்புகின்றனர். மருத்துவ குணம் கொண்ட மரத்தின் காற்றைச் சுவாசிக்கும் போது நோய் வாய்ப்பட்டவர்கள் நலம் பெறுகின்றனர். பெண்கள் மலட்டுத்தன்மை நீங்கி குழந்தைப் பேறு பெறுவர் என்ற எண்ணத்தில் நாட்டுப்புற மக்களின் செயல்பாடுகள் அமைகின்றன.

### தாவரங்களில் தெய்வங்களும், தீய ஆவிகளும்

தாவரங்களில் தெய்வங்கள் உறைவது போன்றே தீய ஆவிகளும் தங்கும் என்பது மக்களின் நம்பிக்கையாக விளங்குகிறது. வேப்பமரம் மாரியம்மனின் மறுஉருவாக நாட்டுப்புற மக்களால் மதிக்கப்படுகிறது. ஆதலால் வீட்டு வாசல்படியின் கீழ்ப்பகுதிக்கு வேப்ப மரத்தைப் பயன்படுத்துவதில்லை. தெய்வத்தன்மை பொருந்திய வேப்பமரத்தைத் தாண்டிச் செல்வதையும், காலால் மிதிக்கப் படுவதையும் மக்கள் ஏற்பதில்லை.

தாவரங்களில் தெய்வத் தன்மையுடையதாகக் கருதும் நாட்டுப்புற மக்கள், சில வகை மரங்களில் தீய ஆவிகள் குடியிருப்பதாகவும் நம்புகின்றனர். புளிய மரத்தில் பேய், பிசாசு போன்ற தீய ஆவிகள் தங்கும் என்பது மக்களின் நம்பிக்கையாகும். “புளிய மரம் வெப்பமுடையதும், வேம்பு குளிர்ச்சியுடையதுமான தாவர வகையாகும். எனவே வெப்பமானவை தீய ஆவிகளின் தொடர்புள்ளதாகவும், குளுமைப் பொருட்கள் இறைத் தொடர்புள்ளவையாகவும் கருதப்படுகின்றன என்பர்.”[5] நாட்டுப்புற மக்கள் மரவகைகளின் தன்மைகளை அறிந்து அவற்றில் தம் எண்ணங்களை ஏற்றி, தாவரங்களில் சிலவற்றை வழிபாடு நிகழ்த்தியும், சிலவற்றை விலக்கியும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

### தீய நிமித்தம் தொடர்பான தாவர நம்பிக்கை

நாட்டுப்புற மக்களின் தாவர நம்பிக்கைகளில் துன்பநிலையினை உணர்த்தும் கூறுகளும் அடங்குகின்றன. தென்னை புல்வகையைச் சார்ந்த தாவர இனமாகும். தென்னையின் ஓலையினை நாட்டுப்புற மக்கள் “மட்டை” என்றழைக்கின்றனர். தென்னை மட்டை தலையில் விழுதல் ஆகாது என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது.[6] இறப்புச் சடங்கில் பச்சைத் தென்னை மட்டையில் பாடை அமைப்பது நாட்டுப்புற வழக்காகும். தென்னை மட்டை விழுவதை இறப்பு நிகழ்வோடு மக்கள் தொடர்புபடுத்துகின்றனர். இச்செயலை நிகழவிருக்கும் இறப்பினை வெளிப்படுத்தும் குறியீடாக மக்கள் கருதுகின்றனர்.

> **அடி மட்டை விழுந்தால் ஆறு மாதத்திற்கும்**
> **நுனி மட்டை விழுந்தால் மூனு மாதத்திற்கும்**
> **நடு மட்டை விழுந்தால் நாலு மாதத்திற்கு ஆகாது**

என்ற சொல் வழக்கு இந்நம்பிக்கை அடியொற்றி எழுந்ததாகும். இந்நம்பிக்கை மரணம் தொடர்பாக மக்களிடையே உள்ள அச்சத்தையும், சுற்றுச் சூழல்களைக் கொண்டு நிகழவிருக்கும் செயல்களைக் கணிக்கின்ற மக்களின் எண்ணத்தையும் வெளிப்படுத்துகிறது.

### விலங்கினங்கள் தொடர்பான நம்பிக்கைகள்

மனித இனம் ஓரிடத்தில் தங்கி வாழ முற்பட்ட பிறகு இயல்பாய் சாதுவாக விளங்கும் விலங்குகளையும், தன்னால் அடக்கி ஆள முடிந்த விலங்குகளையும் தன்னோடு வைத்துக் கொண்டு வாழந்திருக்க வேண்டும். உணவிற்காகவும், உணவு உற்பத்திக்காகவும், போக்குவரத்து, உடை போன்ற தேவைகளுக்காக விலங்குகளை மனிதன் தன்னுடன் வாழப் பழக்கப்படுத்திக் கொண்டதிலிருந்து இன்று வரையாக தமிழ்ச்சமூகத்திற்கும், விலங்குகளுக்கும் இடையிலான உறவு நெருங்கியதாகும். இவ்வாறான நிலையில் விலங்குகள் மீதும் நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள் அமைகின்றன.

### நன்மை அளிக்கும் விலங்குகள்

விலங்குகளின் உடல் உறுப்புகளைத் தன்னுடன் வைத்துக்கொள்ளும் வேளையில் தங்களுக்கு ஏற்படும் தீங்குகளிலிருந்து விடுபடலாம் என்று நாட்டுப்புற மக்கள் கருதுகின்றனர். புலியின் நகம், நரியின் பல், யானையின் வால்முடி, கரடி மந்திரித்துத் தரும் கயிறு ஆகியவற்றை அணிகலன்களோடு இணைத்து அணிகின்ற வேளையில் பலவித நன்மைகள் ஏற்படும் என்பது மக்களின் நம்பிக்கையாகும்.[7] இதனால் தொழில் மற்றும் வாழ்க்கையில் மேற்கொள்ளும் செயல்கள் யாவும் நன்மையளிக்கும் என்று மக்கள் கருதுகின்றனர். நரியாகிய விலங்கு தந்திரம் வாய்ந்ததாக நாட்டுப்புற மக்களால் கருதப்படுகிறது. விலங்குகளின் தன்மை தொடர்புடையவற்றிற்கும் செல்லும் என்பது மக்களின் எண்ணவோட்டமாக விளங்குகிறது. இது "தொடர்புடைய இரு பொருள்கட்கிடையே நிரந்தரத் தொடர்பு இருக்கும்" என்ற தொத்து மந்திரத்தை ஒத்ததாகும்.[8]

### உடலமைப்பில் நம்பிக்கைகள்

மனித இனத்தில் பலரும் பல்வேறு தோற்றங்களை உடையவர்களாகக் காணப் படுகின்றனர். விலங்குகளும் நிறத்தாலும், உடல் உறுப்புகளாலும் மற்றவற்றுடன் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை மாடுகளுக்கு இருக்கும் உடற்சுழிகளாகும். இச்சுழிகள் மனிதனின் தலையெழுத்திற்கு இணையாக நாட்டுப்புறங்களில் கருதப்படுகின்றன. மாடுகளின் உடலில் காணப்படும் சுழியின் இடத்திற்கும், அமைப்பிற்கும் ஏற்ப மாடுகளை வைத்திருப்போருக்கு அதற்குரிய பலன்கள் சென்றடையும் என்று மக்கள் நம்புகின்றனர்.[9] மாட்டுச் சுழியின் இடத்திற்கேற்ப அவற்றிற்கு பெயர்கள் வழங்கப்பட்டு அவை நன்மை, தீமை அளிக்கும் நிலைகள் மக்களால் நம்பிக்கையின் அடிப்படையில் அமைகின்றன.

| சுழியின் பெயர் | இடம் | பலன் |
|---|---|---|
| 1. கொண்டை இழந்தான் சுழி | வால் | உறவுகளை இழக்க நேரிடும் |
| 2. குடை மேல் குடைசுழி | நெற்றி | இன்னல்களைத் தரும் |
| 3. முன்பாடை, பின்பாடைசுழி | முதுகு | இன்னல்களைத் தரும் |
| 4. இராஜா சுழி | நடு முதுகு | நல்லது |
| 5. புரான் சுழி | முதுகு | ஓரளவு நன்மை |
| 6. நொக்கு சுழி | கால் | செல்வம் தங்காது |

நம்பிக்கைகள் மக்கள் தங்களின் வாழ்க்கை அனுபவத்திலிருந்து வரையறை செய்து கொண்டதாக இருக்கக் கூடும். ஒரு பொருள் தன் இல்லத்தை வந்தடையும் பொழுதையும், அதன் தோற்றத்தையும் நாட்டுப்புற மக்கள் கூர்ந்து கவனிக்கின்றனர். அதன்விளைவால் இதுபோன்றநம்பிக்கைகள்தோற்றம்பெறுகின்றன. இல்லத்தில் குழந்தை பிறப்பு, மருமக்கள் அமைகின்ற நேரம் என்ற நிலைகளில் மாடுகளின் வரவுகளும் இவ்வாறான நம்பிக்கைகளில் இடம் பெறுகின்றன.

## வளமை தொடர்பான நம்பிக்கைகள்

விலங்குகள் தொடர்பான நம்பிக்கை களில் வளமையினை மையப்படுத்திய நம்பிக்கைகளும் இடம் பெறுகின்றன. பசு கன்று ஈன்றிய பின் அதன் இளங்கொடியை ஆலமரம், இஞ்சி மரம், அத்திமரம், பேயத்தி மரம், புங்க மரம், போன்ற மரங்களில் கட்டுகின்றனர். இம்மரங்கள் பால் சுரக்கும் தன்மைக்கொண்ட மரங்களாக விளங்குகின்றன. இம்மரங்களில் பசுவின் இளங்கொடியினைக் கட்டி வைப்பதால் பசுவிற்கும் அம்மரங்களைப் போன்று பால் ஊறும் என்று மக்கள் நம்புகின்றனர். மரத்தின் தன்மை அத்துடன் கட்டி வைக்கும் பொருளின் உரியவற்றிற்கும் செல்லும் என்பது மக்களின் கருத்தாக அமைகிறது. பசுவின் இளங்கொடியினை நாய் தின்றுவிட்டால் பசுவின் பால் சுரப்பு நின்று விடும் அல்லது கன்று குட்டிக்கு இறப்பு நிகழும் என்பதும் மக்களின் நம்பிக்கையாகும். இதே போன்று மாடுக் கன்று ஈன்றவுடன் பசுவிலிருந்து சுரக்கப்படும் பாலைக் கிணறு, ஆறு போன்ற நீர் நிலைகளில் ஊற்றுவது நம்பிக்கையின் செயலாகும். நீர் ஊறுகின்ற தன்மையைப் பசுவின் மடியும் பெற வேண்டும் என்ற நோக்கில் மக்களின் எண்ணங்கள் அமைகின்றன.

## முடிவுரை

நாட்டுப்புற மக்களின் வழக்காறுகளில் நம்பிக்கைகள் குறிப்பிடத்தக்க நிலையினை வகித்து வருகிறது. மக்களின் வாழ்வினை நடத்திச் செல்லும் அளவிற்கு இடைவிடாத நிலையினை நம்பிக்கைகள் கொண்டுள்ளன. நாட்டுப்புற நம்பிக்கைகளின் வாயிலாக மக்களின் எண்ணங்கள், தேவைகள், சிந்தனைத்திறன், ஆகியவை வெளிப்படுகின்றன. மக்களின் வாழ்வியல் தேவைகள், ஒரு செயலின் தொடக்க நிலை, இயல்புக்கு மாறாய் அமையும் நிலை ஆகியவற்றில் முழுகவனம் செலுத்தப்பட்டு நம்பிக்கைகள் தோன்றுகின்றன. மக்களின் ஒவ்வொரு நம்பிக்கையிலும் தெய்வ நம்பிக்கைகள் மேலோங்கி விளங்குகின்றன. வான்வெளி தொடர்பான பண்டைய மக்களின் நம்பிக்கைகள் தற்பொழுது சிறிதான மாற்றம் பெற்றிருப்பினும் மக்களின் எண்ணங்கள் ஒரே நிலையாகவே செயல்படுகின்றன. தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றில் ஏற்படும் மாற்றம், தோற்றம் ஆகியவை மக்களின் எண்ணங்களில் நம்பிக்கையாகி சமூகத்தில் நிலைத்து நிற்கின்றன. இவற்றின் வழியாக மக்களின் உணர்வு, தேவை போன்றவை வெளிப்பட்டு பண்பாடாக விளங்குகின்றது.

## சான்றெண் விளக்கம்

1. சின்னாத்தாள் தி. கொத்தமங்கலம், இலால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)
2. சரசுவதி, க. கொத்தமங்கலம், இலால் குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)
3. சுப்பாத்தாள், மா. கொத்தமங்கலம், இலால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)
4. மனோகரன், இரா. நாட்டுப்புற வேளாண்மை, ப. 187.

5. சேங்கோவரதாசன், மேற்குத் தமிழக நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு, ப. 34.
6. செட்டி, தி. மணக்கால், இலால்குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)
7. சரசுவதி, க. கொத்தமங்கலம், இலால் குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)
8. லூர்து, தே. நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், தொகுதி -1, ப. 170.
9. தியாகமணி, சி. காட்டூர், இலால் குடி, திருச்சிராப்பள்ளி மாவட்டம். (தகவலாளி)

## துணைநூற் பட்டியல்

1. காந்தி, க. (1980). *தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்.* உலகத் தழிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. காந்தி, க. (1983). *தமிழர் எண்ணங்கள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.
3. கிருட்டினன், அ. (1992). *தமிழர் பண்பாட்டியல்.* மணிவாசகர் பதிப்பகம், சென்னை
4. சக்திவேல், சு. (1995). *நாட்டுப்புற இயல் ஆய்வு.* சென்னை, மணிவாசகர் பதிப்பகம்,
5. சுந்தரமூர்த்தி, இ. (1991). *இலக்கியமும் பண்பாடும்.* இன்ஸ்டிடியுட் ஆப்ஃசு வுத் இண்டியன் ஸ்டடீஸ், சென்னை செப்டம்பர்.
6. செங்கோ வரதராசன். (1988). *மேற்குத் தமிழக நாட்டுப்புறவியல் ஓர் ஆய்வு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை.
7. தட்சிணாமூர்த்தி, ஆ. (1999). *தமிழர் நாகரிகமும், பண்பாடும்,* யாழ் வெளியீடு, சென்னை.
8. திருநாவுக்கரசு, க.த. (2001). *தமிழ்ப்பண்பாடு,* உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை.
9. மனோகரன். (2001). இரா. *நாட்டுப்புற வேளாண்மை.* பெங்களூர், தன்னனானே பதிப்பகம்.
10. லூர்து, தே. (1981). (பதிப்.) *நாட்டார் வழக்காற்றில் ஆய்வுகள் தொகுதி - ஒன்று.* பாரிவேள் பதிப்பகம், பெருமாள்புரம், திருநெல்வேலி.